[19th September 1959

Irrigation facilities in deficit areas.

* 234 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) "பற்றுக்குறைப் பிரதேசங்களில்" பாசன வசதியளிக்க மத்திய அரசாங்கம் அளித்திருக்கும் கடனுதவி எவ்வளவு ?

(ஆ) இத்தொகை மூலம் புதிதாகப் பாசனத்திற்குக் கொண்டு வர இருக்கும் பிரதேசங்கள் எவ்வளவு ?

(இ) இவற்றிற்கு ஆகக்கூடிய செலவு என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) & (*c*) Do not arise.

Sri A. VEDARATHNAM : இந்தத் திட்டத்தின் கீழே தஞ்சாவூர் ஜில்லாவில் புதிய பாசனத்திற்கு எடுத்திருக்கின்ற நிலங்களுக்கும் பாசன வசதி கொடுப்பதற்கு அரசாங்கம் எப்போது முன் வருவார்கள் ? இந்தத் திட்டம் எப்போது பூர்த்தியாகும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பற்றுக்குறைப் பிராந்தியங்களில் இர்ரிகேஷன் ஸ்கீம்களுக்கு லோன் உண்டா என்பது கேள்வி. இல்லை என்று நான் சொன்னேன்.

ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் புரோகிராம், டிசில்டிங்—கம்-ரிக்லமேஷன் ஸ்கீம் இவைகளுக்கு மத்திய அரசாங்கம் கடன் கொடுக்கிறது. இவைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன, தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள வறட்சி மிகுந்த பிராந்தியங்களில் ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் புரோகிராம்படி சில திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Sri K. ANBAZHAGAN : வறட்சி மிகுதியுள்ள பகுதிகளில், மழையையே எதிர்பார்த்து பயிர் செய்யக்கூடிய இடங்களில், அந்த அந்த மாவட்டங்களில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க ஒரு பெரும் திட்டம் தயாரித்து, மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பண உதவி பெற அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதெல்லாம் கவனிக்கப் பட்டுத்தான் வருகிறது. ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் புரோகிராம்படி ஏரிகள், கண்மாய்களை சீர்படுத்துவது, தூர்ந்து போய் இருந்தால் மண் எடுப்பது முதலிய வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கிறது. இந்த அரசாங்கத்தின் உதவியும் தயங்காமல் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு அளிக்கப்படுகிறது.

Sri S. RAMAKRISHNA THEVAR: சார், தஞ்சாவூர் ஜில்லாவில் இந்தத் திட்டம் வந்திருக்கிறது. பின் தங்கிய பகுதியாகிய ராமநாதபுரம் ஜில்லாவில் இந்தத் திட்டம் ஏற்கப்பட்டும், அங்கு வேலை சரியாக நடக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? சிவகெங்கை மகாநாட்டில் இதை உடனடியாகக் கவனிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறாரே, அப்படியிருந்தும் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணத்தை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் தன் தொகுதியை நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இந்தக் கேள்வியை அவர் கேட்கும்போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ராமநாதபுரம், சிவகெங்கை முதலிய பகுதிகளில் ஏராளமாக இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவைகள் கனம் அங்கத்தினருக்குத் தெரியாமல் இருப்பதைக் கண்டு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

9th September 1959]

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழே பல்லடம், சூளூர், திருப்பூர் முதலிய இடங்களில் குட்டைகள் ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர்கள் சொல்லும் இடங்களில் குட்டைகள் ஏற்படுத்துவதைத் தவிர வேறு வகையில்லை. இந்த விஷயத்தில் கலக்டர் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் 1, 2 நிறைவேற்றி, அதற்கு மேல் வேண்டிய அளவுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பற்றுக்குறை இடங்கள் என்று அரசாங்கம் ஏதாவது இன்வஸ்டிகேட் செய்து ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறதா? அதில் ஏதாவது ப்ரயாரிடி லிஸ்ட் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு அம்மாதிரி அரசாங்கத்தினிடம் ஒன்றும் இல்லை என்று சொன்னேன்.

SRI R. SWAMINATHA MERKONDAR : மத்திய அரசாங்கத்தால் அளிக்கப்படும் டிரில்லிங் பம்ப் திட்டத்தை வறண்ட பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கும் உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரிவர் பம்பிங் ஸ்கீமை வறண்ட பிரதேசங்களில் செய்யமுடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : டிரில்லிங் பம்ப் ஸ்கீம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தண்ணீர் இருக்கும்படியான இடங்களில் எவ்வளவு பாதாளத்திலிருந்தாலும் டிரில்லிங் பம்ப் வைத்துத் தண்ணீர் கொண்டு வரலாம். வறண்ட பிரதேசங்களில், ஏரிகள், கண்மாய்கள் முதலியவைகளைத் தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

Kayalpatnam Water-supply Scheme

* 235 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) when the Kayalpatnam Water-supply Scheme was sanctioned;

(b) when the work was commenced; and

(c) the reasons for the delay in the execution of the same?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The Tiruchendur-Malayalam composite water-supply scheme was sanctioned in September 1949.

(b) The work was commenced during 1950-51.

(c) The delay in the execution of the scheme was due to the delay in securing the required pumpsets. The pumpsets have been procured. The work is expected to be completed within 2 or 3 months.